செய்தி குறிப்பு எண்–31 நாள்–28.03.2008

# அங்கன்வாடிப் பணியாளர்களின் ஊதியம் பற்றி மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா அறிக்கை (28.3.2008)

தமிழகத்தில் 50 ஆயிரத்து 433 குழந்தைகள் மையங்கள் என்ற அங்கன்வாடி மையங்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திலும் ஒரு அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் ஒரு அங்கன்வாடி உதவியாளர் என்ற ஏற்பாட்டின்படி மொத்தம் 50 ஆயிரத்து 433 அங்கன்வாடி பணியாளர்களும், 47 ஆயிரத்து 265 அங்கன்வாடி உதவியாளர்களும் பணிபுரிகின்றனர்.

அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் வரையறுக்கப்படாத ஊதிய விகிதமான (Non-Standard Time Scale) ரூ. 1300–20–1500–25–2000 தி.மு.க. ஆட்சியில் 1.9.2006 முதல் வழங்கப்படுகிறது. அங்கன்வாடிப் பணியாளர்கள் ஒவ்வொருவரும் சராசரியாக ஒரு மாதத்திற்கு ரூ.2792/– பெறுகிறார்கள். அங்கன்வாடி உதவியாளர்கள் ஒவ்வொருவரும் ஒட்டுமொத்த ஊதியமாக ஒரு மாதத்திற்கு ரூ.1360/– பெறுகிறார்கள். அங்கன்வாடிப் பணியாளர்கள் பெறும் ஊதியத்தில் மத்திய அரசின் பங்குத் தொகை 1063 ரூபாயும், மாநில அரசின் பங்குத் தொகை 1729 ரூபாயும் அடங்கும். அதைப்போலவே, அங்கன்வாடி உதவியாளர்கள் பெறும் ஊதியத்தில் மத்திய அரசின் பங்குத் தொகை 500 ரூபாயும், மாநில அரசின் பங்குத் தொகை 860 ரூபாயும் அடங்கும்.

ஆந்திரபிரதேசம், கர்நாடகம், கேரளா, பாண்டிச்சேரி, மராட்டியம், டில்லி மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் அங்கன்வாடிப் பணியாளர்கள் பெற்று வரும் ஊதியத்துடன் ஒப்பிடும் போது, தமிழ்நாட்டில்தான் அதிகபட்சமாக ரூ.2792/– மாத ஊதியமாக அங்கன்வாடிப் பணியாளர்களும்; ரூ.1360/– மாதத் தொகுப்பூதியமாக அங்கன்வாடி உதவியாளர்களும் பெற்று வருகின்றனர்.

தமிழகத்தில் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு நாள் வீதம் வருடத்திற்கு 12 நாட்கள் தற்செயல்விடுப்பும், 3 மாத மகப்பேறு விடுப்பும் வழங்கப்படுகிறது. மேலும் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ரூ.50,000/– ஒட்டு

மொத்த ஓய்வூதியமாகவும், ஓய்வு பெறும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ரூ.20,000/– ஒட்டுமொத்த ஓய்வூதியமாகவும் வழங்கப்படுகிறது. மேலும், அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு வழங்கும்போது அங்கன்வாடிப் பணியாளர்களுக்கும் அதே சதவீத அளவில் அகவிலைப்படியும், ஒட்டு மொத்த தொகுப்பூதியத்தில் பணியாற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.20/– தற்காலிக ஊதிய உயர்வும் வழங்கப்படுகிறது. அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு பொங்கல் கருணைத் தொகையாக 2008ஆம் ஆண்டும் ரூ.825/– வழங்கப்பட்டுள்ளது. மேலும் பணியிலிருக்கும்போது இறக்கும் அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் குடும்ப நலநிதியாக வழங்கப்படுகிறது.

2008–2009ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு 500/– ரூபாயும், அங்கன்வாடி உதவியாளர்களுக்கு 250/- ரூபாயும் கூடுதலாக உயர்த்தி வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. மத்திய அரசின் இந்த அறிவிப்பு குறித்த ஆணை பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கை எடுத்து ஊதிய உயர்வு வழங்கப்படும்.

*****

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.